உ

சிவமயம்.

கணபதிதுணை.

---

இராமநாதபுரம் ஜில்லா

சிவகங்கை ஜமீனைச்சேர்ந்த ஏரியூரென விளங்கும்

சஞ்சீவிநகர் வாசியும்

பர்மா அய்மேன் ஸ்ரீ சண்முகாநந்த சங்கத்

தலைவருமான

ஸ்ரீமாந். பெரி. சே. நா. நாகப்ப செட்டியார்

அவர்கள் மீது கூறிய

# காதல்.

---

இது

மேற்படியூர் செந்தமிழ் வித்வான்

ம-ா-ா-ஸ்ரீ, முத்து. ச. சொக்கலிங்க தாசர்

அவர்களால் இயற்றி

குடந்தை "பாரத மித்திரன்" பத்திராதிபர்

ஆ. சத்திவேற் பிள்ளை அவர்களால்

இரங்கோன்

"சுதேச பரிபாலினி" அச்சியந்திரசாலையில்

அச்சியற்றப்பெற்றது.

---

சுக்கிலஹு கார்த்திகைமீ

உ

சிவமயம்.

கணபதிதுணை.

---

இராமநாதபுரம் ஜில்லா

சிவகங்கை ஜமீனைச்சேர்ந்த எரியூரென விளங்கும்

சஞ்சீவிநகர் வாசியும்

பர்மா அய்மேன் ஸ்ரீ சண்முகாநந்த சங்கத்

தலைவருமான

**ஸ்ரீமாந். பெரி. சே. நா. நாகப்ப செட்டியார்**

**அவர்கண்மீது கூறிய**

# காதல்.

---

இது

மேற்படியூர் செந்தமிழ் வித்வான்

**ம-ள-ள-ஸ்ரீ, முத்து. ச. சொக்கலிங்க தாசர்**

அவர்களால் இயற்றி

குடந்தை "பாரத மித்திரன்" பத்திராதிபர்

ஆ. சத்திவேற் பிள்ளை அவர்களால்

---

இரங்கோன்

"சுதேச பரிபாலினி" அச்சியந்திரசாலையில்

அச்சியற்றப்பெற்றது.

---

சுக்கிலஸு கார்த்திகைமீ

# சிறப்புப் பாயிரங்கள்.

வானுமதுரைத் தாலூகா விளத்தூர்க் கிராமக் கருணம் மாரைநாடு
**ஸ்ரீமாந். சி. மு. அ. காளிமுத்துப் பிள்ளை**
அவர்களால் இயற்றியவை.

நேரிசை வெண்பா.

மாவளங்கொள் சஞ்சீவி மாநகரத் தேயிவருந்
தேவளங்கொள் நாகப்பச் செம்மலின்மேற்—பாவளங்கொள்
பொற்புமிகுங் காதல் புகன்ருன் புலவர்புகழ்
விற்பனனுஞ் சொக்கலிங்க வேள்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தேன்படு கமலச் செழும்புனல் வாவிச்
சேல்கள்பாய்ந் திடத்திரை யெழுந்து
கூன்படு சங்க முயிர்த்தவெண் முத்தங்
கொழிக்குமா வளமிகுந் தோங்கி
மான்படு புவிக்கோர் திலகம தென்ன
வயங்குசஞ் சீவிநன் னகரிற்
கான்படு தெரியற் கரியமென் கூந்தற்
கன்னியர் கண்விருந் தயர,

கன்னலஞ் சிலைக்கை மதனனும் பெண்மை
கருதிட வெழினலங் கனிந்து
பன்னக வரசும் பின்னுறக் கலைகள்
பயின்றிர வலர்கவி வாணர்
தன்னகங் களிப்பத் தண்புய னுணத்
தகைமைசேர் பொருணனி வழங்கி
யொன்னலர்க் கிடியே றென்னவே விளங்கு
முத்தம னகப்ப வள்ளல்,

பண்ணரும் புகழைக் காதலிற் புனைந்து
பண்புற வளித்தனன் பார்த்தே
யெண்ணரும் புலவோ ரிதயமிக் குவந்தே
யேத்தின ரிதன்பயன் கருதி
யொண்ணருந் தமிழைத் தந்தமா முனிவ
னேங்குதென் மலையினி லொளித்தான்
றண்ணருஞ் சொக்க லிங்கவேள் கீர்த்தி
சாற்றுவ தெவன்கொலோ வம்மா.

உ

சிவமயம்.

---

சண்முகநாதன் துணை.

குடந்தை.

## "பாரத மித்திரன்" பத்திராதிபரும்

### மருங்காபுரி சமஸ்தான வித்வானும்

ஆகிய

### ம-ா-ா-ஸ்ரீ, ஆ. சத்திவேற்பிள்ளை அவர்களால்

### இயற்றியது.

---

### நேரிசை ஆசிரியப்பா.

திருவளர் மருமத் தொருநெடு மாலு
மருவளர் வெண்டா மரைமயில் கேள்வனு
மைந்தரு வாழ்க்கை யிந்திரன் றானுஞ்
சுந்தரப் புலவருந் தூயநான் மறையு
மறிதற் கரிய வொருதனி முதல்வனும்
வெறிகமழ் கூந்தல் விமலையு மாயக்
குன்ற மெறிந்த வென்றிவேற் குமரனு
மன்றல்சா னிம்ப மாலைபூண் டாண்ட
பன்னருஞ் சீர்சால் பாண்டி மண்டல
மென்னுங் கன்னி யெழின்மிகு வதன
மன்னுந் திலதந் தன்னி னெளிருங்
கன்னலுஞ் செந்நெலுங் கதலியுங் கமுகுந்
தருவுந் திருவுந் தழைதனி மருத
மருவுங் கருவி வான்முகின் மாதர்
கூந்தற் கூட்டுங் கொழும்புகை மருவி
மாந்த ருவக்க மணமழை பொழியும்
வெண்சுதை மாட மிளிர்தரு கின்ற
தண்சுதைக் கோலஞ் சார்நிய மங்களு

மடமுந் தடமு மலர்நந் தனமு
நடநல் லரங்கு நான்மறை யோதுங்
கிடையுந் தளியுங் கிளர்கல் லூரியு
மடைநீர் வழங்கு வளரறச் சாலையும்
பல்விதப் பொருள்கள் பண்பி னிறைந்த
கல்லொலி யாவணக் கவின்செறி மறுகுங்
கஞ்சநீ ரோடையுங் கஞலிய கனமா
ரிஞ்சிசூ ழேரி யூரொன் றியம்புந்
திருவார் தருசஞ் சீவிநன் னகரிற்
றருவார் கொடைக்கைத் தனவை சியர்தங்
குறைதவிர் வளஞ்சால் குலாம்புதி யதன்க
ணிறைமதி யென்ன நிலவ வுதித்தோன்
பற்பல கலைக ளற்புறப் பயின்றோ
னற்பிர சங்கம் பொற்புடன் புரிவோ
னடக்கமு மன்பு மறனு மமைய
நடக்கு நலத்த நல்லறி வாளன்
பொற்பின மகளிர் கற்புள நழுவ
வற்புறும் வனப்பார்ந் தமைந்த மெய்யன்
கன்னன் குமுணன் காதற் பாரி
யென்ன வழங்கு மெழிலார் கரத்த
னைந்திரு வளஞ்சா லிந்திர னென்னச்
சுந்தர வளங்கள் சூழ்தரு செல்வன்
பூதியுங் கண்டியும் பூண்டுபஞ் சாக்கர
நீதியிற் ஜெபிக்கு நித்திய நியம
னன்னை தந்தை யாசா ரியன்கழல்
பொன்னெனக் கருதிப் போற்றி வாழ்வோ
னெடுநீர் நிலம்புகழ் நித்த னெருஞ்சிக்
குடிவா ழரிகர குமரற் பணிவோன்
புள்ளியோ கரமிவர் வள்ளி மணாளன்
கள்ளவிழ் மலரடி யுள்ளங் கொள்வோன்
மேகப் பன்ன விளங்கிய திருவ
னாகப் பன்னன் னாம நயந்தோ

ணித்தகை நலன்க ளியாவு மியைந்த
வுத்தமன் மீதவ் வூருறை புலவன்
மதுரம் பழுத்து வடியக் கவிசொல்
சதுரன் சொக்க லிங்க தாசன்
மாதலம் புகழும் வண்ணம் வண்ணக்
க[illegible]லன்னுங் கவின்பிர பந்த
மோசையுஞ் சுவையு முயர்பொருட் செறிவுந்
தேசுஞ் செறியச் செந்தமிழ் மொழியா
லன்புடன் யாத்தன னறிஞ
ரின்புட னோக்கி யிரும்பூ துறவே.

உ

சிவமயம்.

ஸ்ரீ சாரதாம்பாள் துணை.

# காதற் பிரபந்தம்.

## விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

சுந்தரஞ்சேர் சஞ்சீவித் தொன்னகராள் நாகப்ப
விந்திரன்மேற் காத லியம்பவே—வந்தெனக்கு
நற்பதமு நற்பொருளு நண்ணவளித் தாளுமைங்கைக்
கற்பகத்தின் பொற்பதமே காண்.

## நூல்.

### கடவுள் வாழ்த்து.

சீராரும் சஞ்சீவித் தென்னகராள் தீரனுயர்
பேராரு மானகப் பேந்திரன்மேற் காதல்சொலப்

பண்கோட்டு மால்வரைமேற் பாரதப்போர் தீட்டுமொரு
வெண்கோட்டு மும்மதத்த வேழமுகன் றாள்பணிவாம்

மண்டலமே லாஞ்சீர்த்தி மன்னவள விந்திரனேர்
கொண்டலெங்கள் நாகப்பக் கோமான்றன் கீர்த்திசொல

சித்தர்கண முற்றுறைசஞ் சீவிவரை தன்னிலென்றும்
நத்தியுறை கின்றமுனி நாதனிரு தாள்துதிப்பாம்

கண்கவர்மெய் யன்சீர்க் கலைகவர்கன் றூமனத்தன்
பண்கவர்சொன் நாகப்பப் பார்த்திபன்மேற் காதல்சொல

பூமலைகள் போற்றும் புகழ்மலையாஞ் சஞ்சீவி
மாமலைமேன் வாழும் மருந்தீசர் தாள்பணிவாம்

வண்டோங்கு செங்கமல மாதோங்கு மெய்யருளைக்
கொண்டோங் கியநமது கொற்றவன்மேற் காதல்சொல

ஆடற் புரிந்தா ரவனியெலாங் காத்தருள்தென்
கூடற் புரியீசன் கோகனகத் தாள்துதிப்பாம்

கற்றவர்க ளேத்துமுயர் கன்னனெனும் சேவுகவேள்
நற்றவத்தில் வந்த நராதிபன்றன் கீர்த்திசொல

பங்கயத்தோ னென்றும் பரவுமெழிற் கூடல்வளர்
அங்கயற்க ணம்மை அரவிந்தத் தாள்பணிவாம்

மந்தரநேர் திண்புயத்தான் மன்னவனு கப்பவள்ளல்
சுந்தரனு மெங்கள் சுமுகன்றன் கீர்த்திசொல

தெள்ளித் தினைமாவுந் தேனுங் கலந்தளித்த
வள்ளிக் கிசைந்தமண வாளனிரு தாடுதிப்பாம்

திக்கனைத்தும் தக்க சிறப்போங் கியநலத் தான்
மிக்கபுகழ் நாகப்ப வேந்தன்றன் கீர்த்திசொல

தாதவிழுந் தண்டுளவத் தாமந் தனையணிபூஞ்
சீதமலர்ச் செல்விமகிழ் சீதரன்பொற் றுடுதிப்பாம்

அண்டர்தரு சிந்தா மணியா விருநிதியுங்
கொண்டலுமே நாணக் கொடுப்போன்றன் கீர்த்திசொல

போதுறையும் வேதன் புகழ்நா வினிதிருக்கும்
மாது சகலகலா வல்லியிரு தாள்பணிவாம்.

---

# அவையடக்கம்.

---

மாவேந்தர் போற்றும் மனுவேந்தன் வாருதிசூழ்
பூவேந் துயிரைப் புரக்குமகு டாதிபனும்

மாதுபதி மார்பனென வந்தபதி நீதிபதி
சேதுபதி மெச்சுஞ் சிவகங்கை யாதிபதி

எங்கோன் மணிமகுடத் திந்திரனு மெவ்வுலகும்
செங்கோ னடாத்துதுரைச் சிங்கமெனு மன்னர்பிரான்

நேத்திரம்போற் காக்குமகா நிம்பைவளர் சஞ்சீவி
க்ஷேத்திரத்தின் மேவித் திகழ்சிவநற் கோத்திரத்தான்

மன்னுசிவ கங்கைவளர் மன்னர்மதிக் கும்மதிமான்
துன்னுமொழி மாறுச் சுகுண வடிவழகன்

தேவேந் திரனார் திருமரபி லேயுதித்திப்
பூவேந்தர் கொண்டாடும் பொற்பார்வெள் ளைச்சாமி

நற்றவத்தி னார்ந்துநெடு நானிலத்தி லேயுதித்திங்
குற்றவர்கெஞ் ஞான்று முதவுஞ் சாதகுணன்

மெச்சும் சமஸ்தான வித்துவா னென்னமனத்
திச்சையுற மேவி யிலங்குகவிச் சிங்கமுமாய்

சங்கத் தமிழனைத்துந் தானே யுணர்ந்துசெய
துங்கனென வெங்குந் துரிதகவி யிற்சிறந்து

பாரும் பரவும் பரன்கமலத் தாளைமுடி
சாருமதி சூழ்பெரிய சாமியெனுங் கொண்டலினைச்

சீரியல மேலாஞ் செகதலமெ லாஞ்சிறக்க
ஆரியனு மாக வமைந்திங் கெழில்பெறுவோன்

சீலம் பெருகுந் திருமா தொளிர் மருமான்
வேல னருட்சஞ்சீவி விற்பனன்செய் நற்றவத்தால்

தக்கபுவி மீதிலுற்றுச் சாரதா தாள்வணங்கும்
சொக்கலிங்க தாசனெனச் சொன்னுமப் பாவலன்யான்

சுந்தரனும் நாகப்பத் தோன்றலுயர் கீர்த்திதனைச்
செந்தமிழின் வல்லோர்முன் செப்பத் துணிந்ததுதான்

வேதமுத நூலுணர்ந்த வித்தகர்முன் கற்றுணராப்
பேதை பல நானயங்கள் பேசத் துணிவதொக்கும்

விண்ணி லுயர்ந் தோங்குமக மேருகிரி யோடிலகும்
எண்ணரிய பாவரைக ளென்றுமிணை யென்பதொக்கும்

ஆரும் அரங்கும் அறையும் இளஞ்சி றுவர்
சீருறப்பார் கீறி லுயர் சிற்பருங்காய் வாரலரே

கல்வியே பாவரையைக் கைகாலி லாவொருவன்
புல்லியே நீருந்தப் போக நினைவதொக்கும்

கொற்றமிகும் நாகப்பக் கோமான் குணங்குறித்தே
கற்றறிந்தோர் குற்றமிதிற் கண்டாலு மேபொறுப்பார்.

# தசாங்கம்.

## வரை.

தேனயந்த சொல்லாருந் தேவருமே வப்பருதி
மானமர்ந்து நிற்குமுயர் மாமருத்து மாமலையான்

## நதி.

பார்ழியந்தோ ளீசன்முனம் பள்ளிகொண்ட தாமெனும்பா
லாழியெனத் தோன்றும் அணிமணிமுத் தாநதியான்

மந்தாரங் கோங்கு மருவுமெலு மிச்சைபலா
பைந்தா ரடர்ந்தார்ந்து பரவுமுயர் மாநதியான்

வீங்கு மலைகொழித்த வெண்பணிலங் தந்தசுட
ரோங்குதர ளக்குன் றெளிருமுயர் மாநதியான்

## நாடு.

கன்னற் கனிரசமும் காவரைத்தே னும்பெருகிச்
செந்நெற்பைங் கூழ்வளர்க்குந் தென்பாண்டி நாடுடையான்

## நகர்.

தக்கநிதி மேவுந் தனவணிகர் வாழ்க்கைநல
மிக்கதென வோங்கி விளங்கேரி மாநகரான்

தோய்ந்த முகிற்குலமுந் தூயமதி யுந்தவழ
வேய்ந்தமணி மாடம் விளங்கேரி மாநகரான்

மாவிருந்தை நாளும் மருவுமுயர் மாளிகைமேல்
மேவுகொடி கூவ மிளிர்ந்தோங்கு மாநகரான்

அந்திவரத் தென்ற லசைந்துவரத் திங்கள்கலை
சிந்திவரக் காமனம்பு சிந்திவரு மாநகரான்

ஆவலுடன் காதல்முத லானபிர பந்தமமை
பாவலர்கட் கேற்ற பரிசளிக்கு மாநகரான்

எந்தவுல கத்தோரு மேறுதற்கு நற்றவஞ்செ
யந்தவுல கத்தோரு மாசைகொளு மாநகரான்

பூமான் முகமெனவும் பொன்மா னரங்கெனவும்
பாமான் றலமெனவும் பன்னுமெழில் மாநகரான்

## பரி.

தடநெடிய வடகுவடு சரியபட மிகுகொடிய
விடவரவு வுடனெளிய விரைவினட மிடுபரியான்

## மதகரி.

செங்களத்தி லங்கெதிர்த்த திண்பகைக்கு லந்துவைத்து
மங்களங்கொ ணர்ந்துவந்து வந்தமர்ந்த குஞ்சரத்தான்

## மாலை.

கானுர் குழன்மடவார் கண்ணிணைக ளென்னும்வரித்
தேனுர்வங் கொண்டுலவு சீரகப்பூ மாலையினுன்

## முரசம்.

மஞ்சே முடனேழு மாமகர வாருதியும்
அஞ்ச முழங்கு மணிசேர் கொடைமுரசான்

## கொடி.

முன்னுழி பாய்ந்தரிகண் மொய்குழலிக் கன்புமிக
மின்னுழி தந்தோன் விளங்கும் பதாகையினுன்

வெங்கட் பகைஞரெனும் வேழம்வெருண் டோடவிளஞ்
சிங்கவுருத் தீட்டிச் சிறக்கும் பதாகையினுன்

## ஆணை.

பாயும் புலியும் பசுவு மொருதுறையில்
நேயமுடன் கூடியென்றும் நீருந்து மாணையினுன்

நீதி நெறியதனில் நிற்பவரைக் காத்தருளிப்
பாதகஞ்செய் துர்ச்சனரின் பண்படக்கு மாணையினுன்

## வாயில்வளம்.

சங்க முழங்கத் தவில்முழங்க முத்தமிழ்ப்பா
சங்க முழங்கச் சதுர்முழங்கும் வாயிலினுன்

மங்களப்பல் வாத்தியங்கள் மாமுரச மேழிசைக்கீ
தங்களொடெக் காளசின்னந் தான்முழங்கும் வாயிலினுன்

மானுடுங் கண்மடவார் வந்தாடக் கொண்டாடித்
தேனுடு மம்புயமான் சேர்ந்தாடும் வாயிலினுன்

விண்பா டகநாட்டார் மேவநல்லார் சங்கீதப்
பண்பாடப் பாரதிமான் பண்பாடும் வாயிலினான்

வேதியர்க்கு மாதுலர்க்கும் வேண்டுமன தானமெந்தப்
போது முதவிப் புகழ்வளர்க்கும் வாயிலினான்

எப்பொழுதும் முப்பத் திரண்டறமுஞ் செய்வோமென்
றொப்பமுடன் கட்டுபடர் மோங்குதிரு வாயிலினான்

சென்னி மகுடந் திகழச் சிவிகையின்மேல்
மன்னமன்னர் காண மருவுபெறு வாயிலினான்

பாடும் புலவோர் பசுந்தமிழ்ச்சொற் பாவுணர்ந்து
நாடுநிதி யாடையணி நல்குமுயர் வாயிலினான்

காலமதி லேற்போர் தமக்குதவி முன்றினிலெக்
காலுமசை யாதமணி கட்டிவளர் வாயிலினான்

மன்னியுயர் மாற்றலர்கள் வந்திருகை யேற்றிமுடிச்
சென்னி வணங்கித் திறையளிக்கும் வாயிலினான்

பஞ்சகலி யாணிப் பரிகள்நட மாடிவரக்
குஞ்சரங்கள் கூடிக் குலவுமணி வாயிலினான்

தெள்ளியயா ழின்சொற் றெரிவையரைக் கண்டினமாய்ப்
புள்ளிமயி னாடிப் பொருந்துமுயர் வாயிலினான்

சொல்வழங்கும் கோலத் துகில்வழங்கு மேழைகட்கு
நெல்வழங்கும் வேண்டும் நிதிவழங்கும் வாயிலினான்

ஞான முழங்க நலமுழங்க நல்குபல
தான முழங்கத் தமிழ்முழங்கும் வாயிலினான்

பத்திமிகு சற்சனர்சம் பன்னர்தள மன்னரொடு
வித்வசன ரெந்நாளு மேவுதிரு வாயிலினான்

## நாயகவாசி.

சொல்லெடுக்கப் பல்லோர் துகளெடுக்கப் பொன்மிதிலை
வில்லெடுத்த வீரனிகர் வேந்தனு கப்பவள்ளல்

நாச்சுவையீ தென்ன நயந்தெரிந்து நாடுதமிழ்ப்
பாச்சுவையி னாய்ந்து பழகுந் திருமனத்தான்

வன்மையொழுக் கம்பொறுமை மாண்புதவந் தெய்வபக்தி
திண்மைமிகு தன்மந் திகழுந் திருமனத்தான்

தருஞ்செல்வந் தந்தாளுந் தன்குலத்துத் தேவதையாம்
நெருஞ்சிக் குடியயனூர் நீள்பதத்தை யேதுதிப்போன்

என்று மொருபடித்தா யிந்திரையத் தாணியதாய்
அன்றலர்செந் தாமரைநே ராகு மணிமுகத்தான்

எத்திக்கும் போற்று மெழிற்பொதிகை வித்தகன்போற்
றித்திக்கு முத்தமிழ்ச்செந் தேன்பொழியும் செவ்வாயான்

கத்துகட லாணை கடந்தாலும் நற்றருமம்
சுத்தநிலை பொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான்

பன்னு கலைசேர் பருதி மதியிரண்டுந்
துன்னுதிசை மாறிடினும் சொன்னமொழி மாறாதான்

கந்தன் குகன்கடம்பன் காங்கேயன் செவ்வேள்சம்
பந்தன் சிவந்த பதுமமலர்த் தாள்பணிவோன்

பல்வளங்க ளோங்குறுசீர்ப் பர்மாவி லேமெனகர்
நல்வளமார் சண்முகா னந்தசங்கங் கண்டதிலே

சங்கத் தலைவனெனச் சார்ந்தறிஞர் மெச்சுபிர
சங்கத்தேன் மாரிபொழி தாஷ்டீக மானமுகில்

தந்தரத்தை நேராத் தரத்தினு லாழிபுக
மந்தரத்தைப் போக்கி வளருந் தடம்புயத்தான்

உற்றரங்க மீதென் றுவந்துவந்து நாடோறும்
வெற்றிமட மாது விளையாடுந் திண்புயத்தான்

பஞ்ச தருக்கடனைப் பஞ்சதரு வென்றுரைக்கத்
தஞ்சமென வந்தோர்க்குத் தாதருளுஞ் செங்கரத்தான்

செங்கதிரோ னென்னத் திகழு மணியாரந்
தங்கியொளிர் கின்றவரை தான்சேர் தடமார்பன்

பண்டலையிற் றோன்றிப் பான்றலையின் மேல்வளர்ந்து
மண்டலத்துக் கின்பம் வழங்கும் மதிமாபான்

செய்யகலை யாவுந் தெளிவுறத்தேர்ந் தின்பமிகு
மெய்யடியா ருள்ளம் விளங்குசிவ கோத்திரத்தான்

ஆலைக் கரும்புவில்லு மைங்கணையு மேந்தாதிவ்
வேலைப் பெருபுவியின் மீதே யுதித்தமதன்

## பிரபு கொலுவிருத்தல்.

ஐந்தருவீ தென்ன அளிக்குமுயர் சேவுகவேள்
மைந்தனென வந்த வரபதிகெம் பீரபதி

கோது பதியாக் குணபதிசெங் கோகனக
மாதுபதி மார்பன் மகபதிநா கப்பவள்ளல்

சொல்லியசன் மார்க்கம்வந்த தூயநிதி மேலோங்க
நல்லறத்தைச் செய்துமகிழ் நாளதனி லேயொருநாள்

நன்மைதருங் கங்கா நதிதீர்த்தந் தானுடிப்
புன்மைதவிர் வெண்ணீறு பூசி மணிபுனைந்து

சேந்தன் குழகனுயர் தெய்வானை வள்ளிமகிழ்
காந்தன் கடம்பனிரு கஞ்சமலர்த் தாள்நினைந்து

முக்கனிபால் முல்லை முகைமூரல் பல்கருணை
தக்கநெய்தே னுதி தழைவிருந்தி னேடருந்தி

தங்கவரை ஞாண்மருங்கிற் றுன்றரித்துக் கைவிரற்குத்
துங்கநவ ரத்நந் துலங்குகணை யாழியிட்டு

ஆணிக் கனக மதனு விழைத்தொளிரும்
மாணிக்கம் பச்சை வயிரப் பதக்கமிட்டு

வாசமிகு பூந்தெரியல் வாசவனைப் பாம்வளஞ்சால்
தேசமன்ன ரேற்றுமுயர் சிம்மாச னுதிபதி

சந்திரகாந் தத்தாற் றலங்கள் பலவமைத்துப்
பங்கிபந்தி யாகப் பவளத்தாற் றாணிறுத்தி

செந்தனிமா ணிக்கச் செழும்பெரிய போதிகைசேர்த்
திந்திரநீ லத்தா லிசைத்துமுய ருத்திரங்கள்

வச்சிரத்தாற் றுளும் மாகதத்தால் நற்கதவும்
பச்சைபல மேவப் பதித்துப் புறமுழுதும்

வெண்சுதையாற் றீற்றி விளங்கியொளிர் மாளிகைபாற்
றண்கடலிற் றோன்றும் தரங்கமே போன்றுளதால்

இச்சையுடன் கற்பகநாட் டின்வாழு மானினமிப்
பச்சையொளி தன்னைப் பசும்புல் லெனக்கறிக்கும்

என்ற பகலு மிருளுமி லாதகினுற்
றோன்று மமரேசன் றென்னகா மொத்தொளிர

விண்ணாடி னர்க்கும் விரும்பும் புவியினர்க்கும்
கண்ணாடி யென்னக் கருதியசை யாதுநிற்ப

கங்குல்பக லின்றிக் கதிரொளிக ளேபரப்பி
எங்குந் துலக்குமெழி லேய்ந்தசபா மண்டபத்துள்

கற்றவர்க ளோடு கவிவாணர் வாழ்த்தவுயர்
வுற்றவர்கள் நல்லோ ருறவினருந் தற்சூழ

கன்னியர்க ளாடக் கவரியிரு பாலிரட்டத்
துன்னிவருங் கட்டியர்கள் தோன்றும் புகழுரைப்ப

வந்தியர்கள் பாடப்பல் வாத்தியங்கள் நின்றொலிப்ப
அந்தரப்பொன் னாட்டி னரம்பையரு மார்த்திகொளத்

தேடருஞ்சீர் பெற்றுமிகு தேசார்ந் திலங்குகின்ற
ஆடவரும் பெண்மை யவாவுந் திருவழகும்

அன்புங் குணமு மறனறிவு நீதியுட
னின்புமிடல் வீரமுமே யேய்ந்து பணிகேட்ப

தாயாகி யன்பிற் றவமாய் நலம்பயப்பிற்
சேயா யுதவிவந்து சேர்ந்தவர்க்கோ ராதரவாய்

காட்டும் பொறையிற் கனிந்த வுருவெனவும்
நாட்டு மழகினுக்கோர் நாயகமீ தென்னவும்நம்

வாட்டந் தவிர்கற் பகமெனவும் மாண்பொருள்கள்
நீட்ட வெழிற்புவியில் நேர்ந்த நிதியெனவும்

நண்ணுகதிர் மேவும் நவமணியி னாற்குயிற்றிப்
பண்ணுமரி யாசனத்திற் பார்த்திபனும் வீற்றிருந்தான்

இன்னவலங் காரத் திசைந்தநம்நா கப்பனெனு
மன்னர்பிரான் சித்தம் மகிழ்ந்திருக்கும் வேளைதனில்

## பிரபு வேட்டைக்கெழுதல்.

மேருவெனத் தோன்றி விளங்கும் விலங்கினங்கள்
சாரும் மருத்துமலைச் சாரல்தனை யேயடைந்து

தான்வேட்டை யாடவுளந் தன்னிலெண்ணிக் கட்டியரைக்
கான்வேட்டைக் காரருக்கும் காசினியி லோங்கியநம்

தேசத்தின் மேவலுறும் சேனா பதிகளுக்குந்
தேசமிகு வீரருக்கும் செப்பு மெனவுரைத்தான்

இந்தவித மாவுரைசெய் தெங்கோன் அரண்மனைக்குட்
சுந்தரமாய்ச் சென்று துலங்குபல பூணணிந்து

கச்சை யிடையிற் கவின வரிந்துகட்டி
வச்ரமணிப் பொற்கவசம் மாண வுடற்கணிந்து

சீத மதிவதனச் சேயிழையார் காதல்கொளச்
சோதிமிகு முத்துத் துராயுடன்பொற் பாகைகட்டி

துப்பாக்கி கத்தி சுரிகைசமு தாடி றுக்கி
அப்பாத் தூணிமுனை அம்புவில்லுங் கைப்பிடித்து

பொங்குமத வேழப் பொலிவினைக்கண் டோங்குமுளைச்
சிங்கக் குருளை மிகச் சீறி யெழுந்ததென

ஆம்பரித் தேர்மா வடங்கக் கதிமிகுந்த
வாம்பரியின் மீதேறி வாட்படையுங் கைப்பிடித்துச்

சீர்விஜய மாதுதிகழ் திண்டோளில் நின்றுடப்
போர்விஜய னென்னமணிப் பொன்முகப்பு வாசல்வந்தான்

அல்லி மலர்க்காந்த ளங்கை சிவப்பேற
மெல்லியர்கள் சூழ்ந்திருபால் வெண்கவரி வீசிவர

கன்னியர்கள் மைக்கட் கருங்காமர் வண்டினங்கள்
பொன்னவிர்பூண் மார்பிற் புணையலங்கல் மேற்புரள

நித்திலத்தின் வெண்குடைகள் நீழல்செய ஆலவட்டம்
பத்திபத்தி யாய்ச்சுருட்டி பைங்கதிரைப் போய்மறைக்க

மண்டலத்தில் மன்னன் வழங்குதலைப் பார்த்தொளித்த
வொண்டருவைத் தேடுதல்போ லொட்டகமண் ணுந்துவர

தாகத்தாற் கைமாவுந் தன்கரத்தை யேநீட்டி
மேகத்தை யேபிடிக்க மேவி வருவதொக்கும்

ஆயும் புடவியைச்சூ ழாழிதனி லேமிகுந்து
பாயு மலையிதெனப் பாய்பரிகள் சென்றனவே

எங்கும் முழங்கு மெழிற்பே ரிகையொலியும்
சங்க வொலியுஞ் சலதியொலி யோடெதிர்க்க

மேளவொலி தாளவொலி மேவுமெக் காளவொலி
காள முகிலின் கனமுழக்கை வாயடைப்ப

வில்லெடுத்து மம்பெடுத்தும் வேலெடுத்தும் வாளெடுத்தும்
சொல்லெடுத்த வேகத் தொடுவீரர் சூழ்ந்துவர

கத்து திரைக்கடல்போற் காலாட்கள் கத்தியுடன்
குத்துசமு தாடுங்கைக் கொண்டுமுன மேநடக்க

துப்பாக்கி கோடிவருந் தோமரம்பா லாகோடி
தப்பாமற் பாயுஞ் சரங்கள் நவகோடி

ஈட்டியொரு கோடி யெறியீட்டி வாள்கோடி
தாட்டிகமாய்க் கொண்டு தளவீரர் தானடக்க

தக்கமதி மந்த்ரிகளும் சார்ந்ததள கர்த்தர்களும்
மிக்கவதி காரிகளும் வீரியப்ர தாபர்களும்

மெச்சுகவி வாணர்களும் மேவுசுற்றத் தார்களும்நல்
லிச்சையுடன் கூடிவிரைந் தேகமாய் முன்னடக்க

## வேட்டைவீரர் பராக்ரமம்.

மத்தக் கரியின் மருப்பையொசித் தெங்கோமான்
நத்துமுயர் தண்டிகைக்கி நாமுதவ வேண்டுமென்றும்

மென்கவரி வால்துணித்து மேவியநம் நாயகற்கு
முன்கவரி வீசியிந்த மூதுலகில் வாழ்வமென்றும்

சிங்கந் தனையடர்ந்து சேணுலவு பாரதனிற்
பொங்கமுறு மாவீரப் பொற்கடயம் வாங்கவென்றும்

தான்மதத்தா லோடிச் சலியா துயர்மிருக
மான்மதத்தைக் கொண்டு வனிதையர்கட் கீயவென்றும்

காண்டா மிருகமதைக் காவலன்மு னேகொணர்ந்து
வேண்டியசன் மானம் விருதுபெற வேண்டுமென்றும்

ஓடுகின்ற மானையெலா மோடிப் பிடித்தரசன்
சூடுகின்ற முத்துத் தொடையல்பெற வேண்டுமென்றும்

வெங்கரடிக் கும்பையெலாம் வென்றுவைப்பாட் டிக்குயர்ந்த
கொங்கைக் கிசைந்தமணிக் கோவைபெற வேண்டுமென்றும்

மல்வி ளையும் வெம்புலியை மாய்த்துவரித் தோலுரித்து
நெல்விளையும் பைங்கால் நிலம்வாங்க வேண்டுமென்றும்

முன்னர்வரு மாவையெலா மோதியதின் பித்தெடுத்து
மன்னர் முகவசிய மைசேர்க்க வேண்டுமென்றும்

தந்தமனத் தொவ்வொன்றைத் தானினைந்து சென்றேகும்
முந்து வெடிக்காரர் முனைவீரர் முன்னடக்க

கச்சைகட்டும் சல்லடமும் காலிவிடு தோலடியும்
தச்சுருவும் வில்லம்பு தக்ககவண் சாலமுடன்

காட்டகத்தில் வாழும் காடிபுலி பன்றிகளின்
தாட்டிகத்தைப் போக்கத் தகும்பெரிய ஞாளியொடும்

செம்பட்டை மீசைதிகழ் செங்கண்வன வேடுவர்கள்
கும்பிட்டு வாய்புதைத்துக் கொற்றவற்கு முன்னோட

சேனைப் பெருக்கிலெழும் செந்தூசி மேலெழுந்து
வானை யடைத்து வருங்கதிரைத் தான்மறைக்க

பொங்கு புகழ்பெருகும் பொற்புறுநா கப்பனெனு
மெங்கள்பிரான் வேட்டைக் கெழுந்துவரு மார்க்கமதில்

பச்சைநிறக் காடையிடம் பாய்ந்தே மரமேற
உச்சிக்கொண் டைச்சேவ லொண்பே டுடன்புணரத்

தேசு மதிவதனச் சீமான் மஹாராச
போசனுமே கண்டுடலம் பூரித் தகமகிழ்ந்தான்

சொன்னயஞ்சே ரெங்கள்குலத் தோன்றற் கிதுசமயம்
நன்மைதரத் தக்கநிந்த நற்சகுன மென்றுணர்ந்து

மன்னவன்முன் னின்றொருவன் வாய்புதைத்துக்கைகள்கட்டி
அந்நெறியி லுற்ற அருஞ்சகுனச் செய்திசொல்வான்

வாய்ந்தபசுங் காடையிட மாகவந்த காரணத்தா
லேய்ந்தவன வேட்டை யினிதாய்க் கிடைப்பதன்றி

வாரணமோர் பேடைதனை மன்னி மருவியதாற்
காரணனே யாங்கொருபெண் கைவசமே யாகுமென்றான்

அன்னவன்சொற் கேட்டுவந்தங் கார்ந்தபெருஞ் சேனையுடன்
மன்னு மருத்துமலை வந்துவளம் பார்த்ததற்பின்

அம்மலையி லோர்பா லமர்ந்தங் கினிதிருந்து
செம்மலுறக் கண்டமலைச் சீரிற் சிலவுரைப்பாம்

## மலைச் சிறப்பு.

வம்பிருக்கும் நற்றருவின் வாய்ந்த தழையொடித்துத்
தும்பியுயி ரன்ன துணைப்பிடிக்கங் கேயளிக்கும்

உண்மலரை நீத்ததும்பி யோர்ந்தபுதுத் தேனுதவும்
தண்மலரென் றேவானத் தாரகையிற் றாவமன்றே

கூனடுத்த வான்பிறையின் கோடுகுத்திச் சார்ந்துவருந்
தேனடுத்துப் பாய்ந்து செழிக்கும் பலவளமும்

வீங்குந் தனக்குறத்தி மென்னுதலோ டொண்மதியை
வாங்கியொப்புக் கண்டு மகிழ்வார் குறவர்களும்

வாரணத்தைக் கொன்றளைந்த வாளரியின் காற்சுவட்டோ
டாரணங்கின் செம்பஞ் சடிச்சுவடு மேயுளது

சார்ந்தமின்னர் காற்குளம்பு தங்குபளிக் குப்பாறை
வார்ந்த நறவிருக்கும் வள்ளமெனத் தோன்றுமெங்கும்

எந்திழைவிண் மாத ரிசைந்தகரப் பூண்வாங்கிக்
காந்தளுக்கே பெய்துயர்ந்த கைகளோ டொப்பறிவார்

வானடுத்தார் நீத்த மணிக்கோவை யைக்கடுவன்
தானெடுத்துப் பூணமந்தி தான்கண் டுவக்குமன்றே

தண்படியும் நீரிற் சமைசுனையென் ருேராது
வெண்படிக மென்றே மிதித்தறிந்து நாணிநிற்பாற்

இன்னவளம் பார்த்தங் கெழுந்தபெருஞ் சேனையுடன்
மன்னனுமே லோங்கி வளர்ந்தவனச் சாருற்று

கங்கைபா கன்சீர் கருதிமயத் தேயுதித்த
மங்கைபா கன்செம் மலரடியைத் தான்பணிந்து

## வேட்டையாடல்.

மொய்த்தபெருங் கானகங்கள் முற்றும் வலைவேய்ந்து
கைத்தடிவில் லோடுமுற்ற கானவரைச் சூழவிட்டு

தாவும் புரவி தனிலிருந்து கீழிறங்கி
மேவுகொம்பு பேரிடங்கா மேகவொலி போலதிர

சொன்னற்றுப் பாக்கிகொண்ட சூரர்களை முன்னிறுத்தி
மன்னனிற்க வீரர் வனத்தைக் கலைத்துவிட்டார்

சிங்கங் கரடிபுலி சீறியெழு பன்றியுடன்
அங்கங் கெழுந்தே அலமந்து தானேட

வேலெடுத்துச் சேர்வாரும் வில்லெடுத்து நேர்வாரும்
கோலெடுத்துப் பேர்வாரும் கொல்லத் துணிவாரும்

சிங்கம் வரிவேங்கை செந்நாய் முயல்நரியி
னங்களுருக் கெட்டு னலங்குலையச் செய்வாரும்

ஈட்டி முனையா லெதிர்த்துவந்த பன்றிதனை
தூட்டி முறிந்தங் குடல்பதறி வீழ்ந்ததுவே

பாவலர்பா விற்குப் பயந்தோடும் லோபியர்போற்
காவறனை மீறியொரு காரா நடந்ததுவே

பாட்டினையே கேட்டுப் பதறுமதி யீனரைப்போல்
வேட்டினையே கேட்டு மிரண்டமத மாக்களெல்லாம்

சேயிழையார் கண்வலையிற் சிக்கியுழல் காளையர்போற்
போய்வலையிற் சிக்கியொரு புல்வாய் மருண்டதுவே

வாரண்டைக் கண்டு மதிமருண்ட மைந்தரைப்போல்
வாரண்டை நின்று மருண்ட முயலினங்கள்

செப்புற்ற வீரர் செலுத்தும் கணையதனாற்
குப்புற்று வீழ்ந்து குலைந்த பலமிருகம்

தம்பட்டை யோசையினாற் சாரசுண மாக்களொடு
அம்பிட்ட மாவு மலரியுயிர் நீத்தனவே

இன்னவிதங் கானகத்தி லேந்தல்செயும் வேட்டையிலோர்
பொனமான் வலையிற் புகுதாம லேதாவி

வில்லம்பு கைப்பிடித்த வேடர்கட்கும் ஞாளிகட்கும்
வல்லயம்வேல் வாள்பிடித்த மல்லர்கட்கு மெட்டாமல்

நீடுபுகழ் நாகப்ப நீதனைச்சேர்ந் தாரைவிடுத்
தோடுங் கலிபோ லுயர்வனத்தி லோடினதே

மாரீச மின்றிவந்த மான்பின் றொடர்ந்தேகிப்
பாரீச னென்றபெம்மான் பாய்ந்துகணை யாற்றுணித்தான்

## பிரபு சேனையைவிட்டுச் சோலையைக் காணல்.

இந்தவிதம் வந்தநம தேந்தல்மிகுந் தோயுயர்ந்த
சந்தமிகுங் காவிற் றனித்தே யிளைப்பாற

சீதமிகு கஞ்சஞ் சிறந்தநீ லோற்பலமும்
தாதவிழப் பூத்த தடஞ்சுனைநன் னீருந்தி

மந்தாரங் கோங்கு மகிழுங் கடம்புமிணர்
தந்தாரம் பாடலமுந் தண்மலரைத் தூவநறும்

புன்னைமரம் மன்னர்வரப் பொன்னெடுத்துச் சிந்துதல்போற்
முன்னுநறுந் தாதுகுத்துத் தூமலரைச் சிந்தினவே

கற்பகத்தே னுய்ந்து கருவண் டினம்பேடைக்
கற்புகமா யூட்டும் அருமை தனையறிந்து

சத்தமிட்டுச் சோலைத் தருவைக் கரிகள்வெள்ளை
மத்தகஜத் துக்களித்து வாங்குநறும் பைந்தருவை

முக்கால முந்தோர் முனிவாரு மேங்கமத
னெக்காளந் தோன்றி யியம்ப நறுங்கீதம்

மாவினங்கள் பாட மயிலினங்கள் கூத்தாடக்
காவினத்தின் மந்தி களைத்துச் சிரந்துளக்க

காந்த னுரைதவருக் காரிகையார் முன்னிலையில்
வேந்தன் புகழையவா மேவிப் பயிற்சிபெற்ற

மஞ்சரிக டோறும் மருவுமிளம் பைஞ்சிறைய
அஞ்சுகங்கள் பாட அரசன்கேட் டுண்மகிழ்ந்து

துங்கவரி நாணேற்றித் தோன்றுஞ் சிலைக்கரும்பைச்
செங்கரத்தி லேந்தாச் சிலைமதனைப் போலவந்து

பூவேந்தர் மெச்சும் புகழ்வேந்தன் பூலோக
தேவேந்த்ர னென்னவனச் சிங்காரம் பார்த்திருந்தான்

## பெண்ணினல்லாள் சிறப்பு.

அஞ்சம்பி னுனுமஞ்சு மண்ணலங்கு வீற்றிருக்க
அஞ்சம் பிடிநடையை யார்ந்தவளின் றன்மை சொல்வாம்

வார்ந்த வெழிலம் மலைச்சா ரொருபாங்க
ரார்ந்த புவியா ளரசர்க் கரசனெப்பான்

மாதமும் மாரி வருஷிக்கு மாநகரான்
தாதளையு மௌவன்மலர்த் தாரினன் சீர்த்தியுளான்

தன்னுயிர்போல் வாருகிரும் தாரணியிற் றோன்றுபல
மன்னுயிரைக் காக்கும் மகபதிசு காதிபதி

நன்னூ லிதிகாசம் நான்மறைகள் மற்றுமுள
பன்னூலிற் றேர்ந்தே பனக வரசையொப்பான்

மோகபுரி யைப்புரக்கு மொய்ம்பன்றிங் கட்குடையான்
வாகமர்வி வேகனெனும் வள்ளல் திருநிகர்த்த

சம்போக வல்லியிவர் தாம்செய் தவத்துதித்த
அம்போ ருகத்தா னமைத்துயர்நாற் சாதியினுள்

நண்பகத்தே கொண்டெந்த நாளும் நறுமணஞ்சேர்
செண்பகத்தை யொத்தவுடற் றேசார் பதுமினிப்பெண்

அம்பு விழியா ரணங்குக் கணங்குசெய
அம்புவியிற் றேன்றும் அமிர்தகுண பூஷணியாள்

எக்காலு மோவியர்க ளேங்கியெழு தாதுநிற்ப
முக்காலுந் தேர்ந்து முதிர்ந்தெழுது காமசித்ரம்

ஆர்ந்த புவியி லயனூர் அரிவையர்கள்
வார்ந்த அழகின் வரம்பிற் கமைத்தமணி

பங்கமுறு பாம்பின் படத்துறையா தாடவர்க்காய்
அங்கசவேள் தம்பா லடுத்துறையு மோகாத்நம்

பார்க்க மதிக்கப் படாதுபார்ப் பார்மனதை
யீர்க்கமதன் மோலிக் கிசைத்தமைத்த சிவாத்நம்

தூய வலையிற் றெடரா வளையமையா
மாய வலையில் வளைக்குமுயர் வானமுத்து

சேர்த்தமத னஞ்சடக்கித் தேர்ந்த முனிவரர்கள்
பார்த்தவுட னேடப் படைத்தவிலி யாம்பதுமை

கோடாது தேய்ந்து குறுகா தனுதினமும்
ஓடா துலகி லுயர்ந்தொளிறு மாமதியம்

விண்ணுள் பவரை விரிஞ்சனரி யைக்கடல்சூழ்
மண்ணுள் பவரை மயக்கவரு புத்தமுதம்

சொல்விரசம் காமச் சுகரசம் போகரசம்
பல்விரசம் சார்ந்து பரவும் நறியகனி

காமன் றனது கரத்திலனு காவளைக்கா
மாமன் றனையும் வளைக்க வருகரும்பு

மெய்வெளுத்து வேதனையே மேவா துயர்ந்தநடை
ஐயமில்லா வைய ரயா நடக்குமன்னம்

நேர்த்தியுட னுடாது நேர்குகன்பா லோடாது
பார்த்திபரை யாட்டுதற்குப் பாரி லுதித்தமயில்

வேள்குதிரை யாகாது மெல்லியர்கை மேவாது
வாளரச ராவிதிறை வாங்குங் கிளிப்பேடு

ஆகங் கருத்துலகி லார்ந்து திரியாமல்
தேகஞ் சிவந்தணையிற் சேர்ந்து வளர்ந்தகுயில்

சந்தனமும் பன்னீருஞ் சவ்வாதுங் குங்குமமும்
கந்த மிகுகதம்ப கஸ்தூரி யும்புனுகும்

மல்லிகைவெண் முல்லை மலருமிரு வாட்சியுடன்
அல்லிபிச்சி செவ்வந்தி யார்ந்து மருவளைந்து

கோங்கரும்பு வள்ளை குவளை குமிழினொடு
தீங்கரும்பு சைவலமும் செங்காந்த ளுங்கமழும்

பூகங் கதலியொடு பொற்று மரைதாங்கி
ஆகம்பொன் போர்த்து மரியபுவி யிற்புகுந்து

தவரு மயலாய்த் தயங்க மனமதனைக்
கவரும் பெரியதொரு காமப்ர வாகநதி

இன்னமிர்த சஞ்சீவி யென்னுமுயர் தோழியைப்பார்த்
தென்னிடது கண்ணோ டிடத்தோள் துடிக்குதென்றாள்

எந்து மெழிற்சகிகேட் டெந்தாயே யிக்குறியாற்
காந்தருவம் வந்துனக்குக் கைகூடு மென்றுரைப்ப

அந்த வுரைகேட் டமிர்தகுண பூஷணியும்
புந்தி மகிழ்ந்துநறும் பூவெடுக்க வேநினைந்தாள்

ஓர்ந்தமட மாதுக் குயர்ந்தமஞ்சள் நீராட்டிச்.
சார்ந்த புனுகினொடு சவ்வாது மேதிமிர்ந்து

மாசகன்ற தூயநறு மன்றற் புகையூட்டி
வாச மிகுதயிலம் வார்குழலின் மேற்றடவி

பொட்டார் நுதலாட்குப் பூவையர்க ளோங்குரத்நப்
பட்டாடை வேய்ந்து பணிகள்பல பூணுதற்கு

## அமிர்தகுண பூஷணிக்கி நகை தரித்தல்.

மாரன் சிலைவளைக்க வாய்ந்தவண்டி னலமைந்த
நாரி நெகிழ்ந்தகன நல்லசடை கைபுனைந்து

ஆர்ந்த சடையா மரவ முமிழ்ந்ததென
வார்ந்த கதிர்பிறையை மானுதன்மேற் சேர்த்தினரால்

ஓதிமீ தூர்ந்துசந்த வொண்டிலத மாமதிக்கிப்
போதுபாம் பென்னவொளிர் பொன்வகிரிற் சுட்டியிட்டார்

கண்ணி னுறவைக் கருதி யடுத்திருப்ப
வெண்ணியபோற் பானல் எழிற்செவியின் மீதணிந்தார்

ஓங்கு தவத்தை யுலைப்பதற்கு வேளனுப்பத்
தாங்கியதா மென்னத் தயங்கவிட்டார் பொன்னுலை

பங்கஞ்செய் பல்லின் பழியினுல் முன்னிறப்பத்
தொங்குவதா மென்னத் தொடுமுக் கணியுமிட்டார்

கற்றைக் குழலின் கனத்தா லணங்குமென
உற்ற யணியா லுயர்ந்தகளப் பூணணிந்தார்

வாய்ந்த தனமலைமேல் மைந்தர்மன மேறுதற்கு
வேய்ந்தபடி போன்மார் பிசைத்தார் மணிக்கோவை

கூந்தற் பொறையுங் குவிந்த தனப்பொறையு
மேந்துதலால் நோமென் றிசைத்தார்நன் மேகலையை

கன்னியத்தந் தன்னின்மணிக் கற்கடக முற்றதென
மன்னுவளை காக்க மணிக்கடகங் கையிலிட்டார்

ஆயுஞ் சுவையை யளிக்கும் காந்தடுத்து
வாயி னழகறிய வாய்ந்ததெனத் துப்பணிந்தார்

செம்பவள நற்கொடிமேற் சேர்ந்து நவ மணிகள்
பம்பியபோற் கைவிரற்குப் பன்மோ திரங்களிட்டார்

உற்றமத மாவரல்கண் டோட மணியிடல்போற்
பற்றகன்று ரோடப் பதத்திலணிந் தார்சிலம்பை

கைவனைந்த வேலார் கருத்துமணிக் குன்றேறில்
மெய்வழுக்கி வீழ விரும்பிநறுந் தொய்யிலிட்டார்

புல்லணியை நீக்கிப் பொருந்தழகு மேவலுறும்
சொல்லழகி யென்றுட்குச் சொன்ன நகைதரித்தார்

பொற்பா ரழகினுயர் பூடணமே போன்றிலகு
மற்பார்ந்த மின்னுட் கலங்கரிப்பங் கானவுடன்

## அமிர்த குணபூஷணி பாங்கியருடன் சோலைவளங்கண்டு மலர் கொய்தல்.

மாணிக்க மாலை மருவுங் குணமாலை
ஆணிப்பொன் மாலை அணிபூ ரணமாலை

பன்னுமெழிற் பாங்கி பலரோ டலரெடுக்கப்
பொன்னி னமிர்தகுண பூஷணியுங் காநுழைந்தாள்

மாலைவளங் கண்டடரும் வண்டினம்போல் மங்கையர்கள்
சோலைவளங் கண்டுநறுந் தூய மலரெடுத்தார்

வஞ்சியர்கள் கைதீண்ட வாய்ந்துயர்ந்த கொம்பரெலாம்
அஞ்சிலம்பார் பொன்னடிதாழ்ந் தார்ந்தமல ரீந்ததன்றே

வம்பியலார் தம்பதத்தில் மன்னர்முடி யுந்தாழக்
கொம்புவந்து தாழ்ந்ததென்று கூறிடுமித் தன்மையென்னே

செவ்வாய் முருக்கிருக்கத் தேமன்முலைக் கோங்கிருக்க
ஒவ்வுமுய ராம்பலினு ளோங்குமுல்லை மொட்டிருக்க

செய்ய திருமுகமாம் செந்தா மரையிருக்க
மையார் கருங்குவளை வாரிசமேற் பூத்திருக்க

காசு பணமிருக்கக் கையேந்தி நிற்பவர்போ
லாசையொடு பூத்தமா மத்தனையுஞ் சென்றுசென்று

காரிகையாள் கண்முகங்கை கால்கடமைக் கண்டுவண்டு
வாரிசமென் றெண்ணிமொய்ப்ப வாய்ந்த மலர்பறித்தாள்

## அமிர்த குணபூஷணி சோலையிற் பாங்கியரை நீங்கி மலர்கொய்தல்.

ஆவிதனிற் பூவா வாவிந்தங் காவிமலர்
தாவின்மதி பூப்பத் தனிவண்டி னம்மருள

மால்கூட்டு மாதர் மனங்கூட்டு நாகப்பன்
பால்கூட்டும் பாலடுப்பப் பாங்கியரைத் தானொருவி

பொன்னினத்தால் வேய்ந்த புதுமா னிதுவெனவே
தன்னினத்தை விட்டுத் தனித்த திருமாது

காவி மலரினளி காலாற் றுகைத்தலினாற்
றேவிதிருக் கண்ணின் சிறப்பின் றெனவிகழ்ந்து

சாருங் குமுதமுல்லைத் தண்மலரைப் பூத்திலதால்
நேருந் தனதிதழை நேரா தெனநீக்கி

முல்லை மலரினளி மூசுதலா லேதனது
பல்லையொவ்வா தென்றே பறித்துவெறுத் தேயெறிந்து

வம்பாருங் காவிகுமிழ் வள்ளைமரு வாதலினால்
அம்போ ருகமுகநே ராகா தெனவகற்றி

வேட்டு மலரை வெறுத்து விரும்பியநற்
கோட்டு மலரைக் குறித்தாள் குணத்தின்மிக்காள்

தாழையே நின்மலரைத் தந்திலேநீ காலையற்றுப்
பீழைதரும் வாளெனப்பேர் பெற்றதனுற் போலுமன்றே

அன்னையென வந்தோர்க் களிக்கா வுலோபரைப்போற்
புன்னையே பொன்மலரைப் பூத்துமளிக் காததென்னே

உள்ளுருக்க மில்லா வுலுத்தர்போ லேமலரை
முள்முருக்கென் றேபேர் முடிந்ததால் தந்திலையால்

மேவிவந்து நின்மலரை வேண்டவிடம் போலநின்ருய்
காவிற் கடுக்கையென்றல் கண்டேனின் றேனதனுல்

சாரு மலரதனைத் தந்திலைநீ சண்பகமே
ஆரும் அளியிலையென் ருரதனுற் காய்ந்திலனுல்

குங்குமமே நின்மலரிற் கொண்டே னுளமுனக்குத்
தங்குமறு பேரதனுல் சார்ந்தேன் மனக்கலக்கம்

என்றுமல ரெல்லா மிழித்து மனஞ்சுளித்துச்
சென்றுமனத் தேய்ந்த சிறந்தநறும் பூவெடுத்தாள்

மாதுளத்தைப் போல வணங்கி யளித்ததினுல்
மாதுளத்தின் போதை மகிழ்ந்து காத்தெடுத்து

தாய்சிறந்த தென்னத் தனித்தவளை யாதரிக்க
வாய்திறந்து நின்று மருவுதிரு வாம்பலொடு

மல்லிகைசெவ் வந்திபிச்சி வாச மருக்கொழுந்தோ
டல்லியிரு வாட்சி யடுத்த மலரெடுத்துப்

போதையெல்லா மீந்து பொலிவிழந்த கொம்பருக்கு
மாதரசி தூய மணியா ரணிபூட்டி

சோகமெலாந் தீர்ப்பதற்குத் தோன்று மசோகமதின்
மேகமொடு சார்ந்துவரு மின்போல் தனித்துநின்ருள்

## பிரபு சோலையில் அமிர்த குணபூஷணியைக் கண்ணுறல்.

சோலைவளம் பார்த்துத் தொடர்ந்துவரும் போதுகுண
சாலையெனத் தோன்றித் தனித்த திருமாதாம்

காண்டற் கரியயிந்தக் காரிகையா சூழடைந்து
தூண்ட வெளிவருநற் றூய குமாரனைப்போல்

வாகொப்பா ரில்லா மதனனென வேயொளிரும்
நாகப்ப வள்ளலெனு நாமப் பிரபலவான்

நூலிடைமேன் மேகலையும் நூபுரமு மோதியினிற்
சாலு மணியொலியுந் தையனிலை யைக்காட்ட

மன்னவனு மோசை வழியே மலர்மருவும்
பொன்னனைய மின்னொளிசெய் பூவை தனைப்பார்த்தான்

## ஐயம்.

பாரணங்கோ மேவுதிருப் பாற்கடலின் வந்தமின்னோ
நீரணங்கோ சேடன் நிலமேவு கன்னிகையோ

சந்தமிகும் வெற்பதனைச் சார்ந்த மடமாதோ
வந்துநிற்கும் பெண்ணின் வகையொன்றுந் தேர்கிலனே

## துணிவு.

வார்ந்தகருங் கூந்தன் மலர்மாலை வாடியதா
லார்ந்த குறுவேர்வை யாநநத்திற் றோன்றுவதால்

கண்ணி னிமைகள் காம்போ லுழைப்பதினால்
மண்ணி லடிகள் வருடுவதா லித்தலத்தின்

மங்கையிவ ளென்ன மதித்தே யிவட்குரிய
அங்கமெலாம் பார்த்தங் கதிசயித்துப் பேசலுற்றான்

## பிரபு அமிர்த குணபூஷணியை வியத்தல்.

ஒருறுப்பைப் பார்த்தால்மற் றோருறுப்பைப் பார்ப்பதற்கு
நேருமன மென்றுசொல்ல நேராதென் றேநினைத்து

வாய்ந்த அனிச்ச மலரி லனுதினமுந்
தோய்ந்தோமின் னூர்வருடச் சோரிசுரந் தோமதன்றன்

பூட்டியதோர் மோலி புடைத்தோ நறியசெம்பஞ்
சூட்டியோ சேந்தங் கொளிரு மிருதாள்கள்

மெய்த்தவத்தி லேதோய்ந்த வேதியர்க ளுள்ளமெலாம்
எய்த்தேக வேநிறுக்க வேய்ந்ததரா சோபாடு

தாவும் வராலோ தளராது மன்மதனும்
மேவிச் செயம்பெறற்கு வேய்ந்தாவ மோகணைக்கால்

கலையார்ந் தொளிருங் கவின்முழந்தா ளிற்குவமை
யலவனெனச் சொல்லுவதே யல்லாது வேறிலையே

வாழையோ காலையாம் வாய்ந்தமத வேழமதைப்
பீழையுறக் கட்டும் பெருந்தறியோ வேடனது

மண்டபத்தி லுற்ற மணித்தூணோ கண்டவர்கள்
தொண்டுபட வேயமைந்து தோன்றுந் துடையிரண்டும்

ஆர்ந்த வணிதனத்தா லம்பாலி னுன்மிகவு
நேர்ந்ததெனக் கண்டோர் நினைதந்தி நேரிடையாள்

மன்னு தனமாம் மதயானை யின்கரமோ
உன்னு மிருவனசத் தூடெழுந்த நாளமதோ

வேளூரிய தேர்நடத்த வேய்ந்த மணிவடமோ
வாளூரிய கண்ணாள் வயிற்றின் மயிரொழுங்கே

கோங்கரும்பென் ருல்நுதியிற் கொண்டகருப் பில்லைமரைப்
பாங்கரும்பென் ருலோ பருநி வரமலரும்

மேல்வாய்ந்த பச்சிளநீர் மேவிற் புளகரும்பா
நால்வாயின் மத்தகமோ நற்பா கரைத்தாங்கும்

செங்கையினல் மேரு சிவன்வளைத்த தாதலினல்
மங்கையிரு கொங்கை வடிவதனை நேரிலையால்

துன்றுபவ ளக்கொம்புந் தோன்றுஞ் சினைக்கெளிறும்
ஒன்றும் விரல்கணிக ரொவ்வா தெனவிகழ்ந்து

தாமரையோ நீரிலொரு தாளிற் றவம்புரிந்தும்
நேமமொடு கானடைந்து நீண்டதவங் காந்தள்செய்தும்

காரிகையின் சேயவகங் கையைநிக ராததினல்
பாரின்வரா தின்றும் பயமருவா நின்றதுவே

தேமலைவாய்க் குந்தனமேற் சேர்ந்தொளிருந் தோளிணைக்கு
மாமலைவாய் தோன்றும் வரையோ நிகராகும்

பூகமோ சங்கோ புகழ்களத்தை யொப்பாகும்
தேகமோ பார்த்தவரின் சித்தத்தைக் கொள்ளைகொள்ளும்

தேவி திருமுகத்தைச் செந்தா மரைநிகரா
மேவுமதி யோகளங்க மேவிக் கலைகுறையும்

துப்பிலவோ கோபமோ தொண்டையோ மாதுளையோ
ஒப்பிலவே யென்னவித ழோங்கி யொளிமருவும்

முத்துமுருந்தும் முகிழ்முல்லை யும்மிவடன்
ஒத்தொளிரும் வெண்பற் கொருநாளு மொப்பாமோ

தோன்றுந் திருமால் துணைக்கரங்கள் சோராம
லான்ற மதிய மழுங்கி மழுங்காமல்

தூய சலதி துளங்காமல் வானவரு
மேயதொரு தானவரும் வெம்போர் தொடங்காமல்

மந்தரமும் வாசுகியும் வாடி வருந்தாமல்
சந்ததமு மாசை தருமமுத மேயூறச்

சேர்ந்தபா கோகரும்போ தீங்கனியோ முத்தமிழின்
ஆர்ந்த சுவையோ அரிவைதிரு வாய்மொழியே

நீர்நிலையும் சாணையுமே நோ வொளிருலதுக்
காருங்கண் ணாடியென வார்ந்த கபோலமது

விள்ளுங் குமிழின் விதமே வடிவுறினு
மெள்ளுமொவ்வா தென்ன இசைக்கு மெழிலடைந்து

நாற்றிசையும் போற்றுமதன் நற்றேரின் வீதியெனக்
காற்றிசைந்து லாவக் கனிந்தொளிரு நாசியினாள்

பூசலிடும் வண்டார் புயத்தா ருளமதனை
யூசலாக் குந்தரத்தா னூசலெனவே பொருந்தி

ஆளு மழகின்மிக்க வாடவர்க ளார்ந்தவிழி
வாளுருவிப் பாய்ந்த வழியதுபோ லத்தோன்றி

ஆழ்ந்த விருபா லலையுதிக்கு மாதவன்போற்
சூழ்ந்தொளிரு மாணிக்கத் தோடமைந்த வார்செவியும்

நஞ்சை யமுதை நயந்தளிக்கும் பாற்கடல்போல்
வஞ்சமொடு சூதுகள்ள மாயமொடு நேயமுற்று

மூர்த்தி யுருவிதென மூன்றுநிற மேபடைத்துச்
சீர்த்தி பெறுமதன்விற் சேர்ந்த கணையெனவும்

காதுவரை நீண்டுகுடங் கையினகன் றூர்கவினு
றோது கவியினையொத் தோங்கு மிருவிழிகள்

நேர்ந்த புயலை நிறைமதியைத் தானடுத்தங்
கார்ந்த சிலையெனவு மாழிக் கயனமைத்து

வைத்தகரை யென்னவுங்கண் வாளுரையீ தென்னவுமே
மெய்த்துயர்ந்து மைதோய்ந்து மேவு மிருபுருவம்

செவ்வகத்திப் போரும்புஞ் சேரட்ட மிப்பிறையும்
ஒவ்வா தெனின்வே றுவமை நுதற்குமுண்டோ

சீத மதிமேவச் சேர்ந்தபுய லோவனசப்
போதடுத்த வண்டின் பொலிவோகல் லார்மனதோ

நெய்த்துச் சுருண்டடர்ந்து நீண்டுநெறித் துக்குழன்று
மைத்துச் சிறந்தியற்கை வாசனேதோ யுங்கூந்தல்

இத்தகைய மேலா மெழிலடைந்த மாதினைப்போல்
எத்தலத்துங் காண்டற் கிசையா தெனநினைந்தும்

சுந்தோப சுந்தரெனும் சூரா ரிருவருக்காய்
அந்தமுற வந்த அயன்படைத்த மாதரசோ

சூரனுக்காய் ஐவிரலித் தூரிலுற்றூற் கானமயல்
கூரவெளி வந்தருளுங் கோதை திருவுருவோ

பொன்னொளிரும் நற்கமலப் பூவையிரு வோரெழிலைப்
பின்னெழிலாய் வைத்துப் பிறங்குந் திருவுருவாள்

தீதகன்ற ரம்பை திலோர்த்தமையிந் ராணியிவர்
பாதமதைத் தீண்டுதற்கும் பாக்கியஞ்செய் தாரிலையே

என்று பலவா யியம்பித் தனதுமனம்
ஒன்றிப் புகழ்ந்தே யுளக்காதன் மேலோங்க

பேதைதருங் காமமயற் பித்தந் தலைக்கேறி
வாதைதனை மேவி மனதோடு பேசலுற்றான்

மாதரசி தம்பால் மருவுங் குறுநகையால்
ஆதாவுண் டென்றே அறிவிப்ப தல்லாமல்

கண்ணிமைகள் மையற் கடும்பிணிக்கோர் நன்மருந்தாய்
தண்ணளியுள் ளோங்கித் ததும்பித் தருமமுதம்

எத்தலத்தும் பார்த்தடைதற் கெட்டா துயர்ந்தநறும்
புத்தமுதைக் கிட்டிம் பொருந்தி யறிவமென

சேர்ந்தடர்ந்த பூங்காவிற் சேர்ந்த வசோகமதிற்
சார்ந்தமர்ந்த மாதினிடந் தானடைந்து பேசலுற்றான்

## பிரபு அமிர்த குணபூஷணியை வேண்டல்.

போர்வேலை வென்றவிழிப் பொன்வேலென் மார்புருவத்
தார்வேய்ந் தொளிருமுடி சாய்த்துநிற்றல் நீதியனறே

பேசினு லென்ன பிழைநேரு மாமதிசேர்
மாசகன்ற செம்பவள வாய்முத் துதிர்ந்திடுமோ

போரானை யாமெனது பொன்னுளமேற் போர்முலையாம்
யீரானை யேவி யினிதிருத்தல் நீதியன்றே

வெள்ளி மலைபோல் விளங்கப் பொருள்பெறினும்
எள்ளு மரைப்பணத்துக் கேங்க லியற்கையன்றே

பார விருவிழிவேல் பாய்ந்ததழும் பாரமணித்
தாரமருஞ் சிந்துரத்தைச் சாத்துவீர் மார்பினிடை

மாலையே தாங்கெனது மார்பூடு பாய்வதர்க்கு
வேலையே கைக்கொண்டு விட்டீர் களிறினையே

மின்றோய் விழிவேலான் மேவும்விடாய் நீங்குவதற்
கென்றோ நறியதொண்டை யின்னமுத மீவதுவே

எனுலவு பொற்றாண் எழிற்றேள் மருவுதினம்
வீணுறவே நின்றால் விரும்புவது மெக்காலம்

ஆய்ந்தகுலி சாயுதற்கன் றஞ்சிவந்த மாமலையை
வாய்ந்தவார்க் குட்படுத்தல் மானே கருணையன்றே

புல்லியதோர் காமப் பொரும்பிணிக்கி நன்மருந்தாய்
அல்லி மலரி னணிமுல்லை பூத்ததுவே

பூத்தமல ரென்றுசொல்லும் புன்முறுவ லென்மயலாம்
நீத்தமதை நீந்துதற்கு நேர்தெப்ப மாயதுவே

தையலரை விட்டுத் தனித்ததுவு முன்னுளிற்
செய்த தவத்தின் சிறப்பினு லாயதன்றே

ஆனதொரு முத்தம் அளித்தால் அதிகவில்லை
போனதொரு கோடிமுத்தம் பொன்னுமக்குத் தாரேனே

செம்பவள மேவும் செழும்பவள மொன்றளித்தால்
நம்பவள மோங்கும் நகைமணியெ லாமுனதே

மானெலா மோட்டி வலைப்படுத்தே னுந்தன்விழி
மான்வலையிற் சிக்கி மதிமருண்டேன் காரிகையே

மாவெலாங் கண்டு மடித்தே னுனதுமத
மாவருதல் கண்டு மயங்கினேன் பைந்தொடியே

கோடுமுயர் பாம்பணியைக் கொண்டுமலை வாயடைந்தும்
மாடினையே யூர்ந்து மலைக்கி மகளானுள்

பல்விடந்தோய் பாம்போ படுக்கை அலைவாழ்வு
செல்வர்மனை தோறும் திரிவா ளிலக்குமியே

அன்னமிலா தின்றும் அயன்றேவி நாமகளென்
றுன்னுகவி வாண ருரைவிடமெ லாமுழல்வாள்

மூவேந்தர் போற்றும் முடிவேந்தர் மூவுலகில்
மாவேந்தர் மெச்சும் மதிவேந்தன் யானுணர்வாய்

நேர்ந்துயர்ந்த செய்த நிலாமணிதோய் மண்டபத்திற்
சார்ந்த நறுமணந்தோய் சப்ரமஞ்சக் கட்டிலின்மேற்

கன்னியர்கள் பாடக் கவரியடுத் தோரிரட்டத்
தன்னியலைப் பார்த்துத் தாதலத்தி னோர்மயங்க

ஈட்டுவோர்க் கான விருநிதியெ லாமீந்து
பூட்டுவதற் காயமணி பூண்டுலகி லேமதிக்க

மேனகையு மூர்வசியும் வெள்ளடையீ யுஞ்செல்வம்
தானடையா தின்று தனித்துநிற்ப துன்விதியே

சாந்தமிகு தூய தவத்தினோர்க் காயதெல்லாம்
காந்தருவ மென்றே கருதுவா யென்றுரைக்க

நேருமுறை யெல்லாம் நினைத்துப் பதமதனுற்
பாரினையே றீறுமுயர் பாவைநிலை பார்த்துணர்ந்த

தாரிணைதோள் நாகப்ப தாஷ்டீக மாரனெழிற்
காரிகையின் கற்கடகக் கைபிடிக்க நாணினின்றாள்

மாதரசி யும்மதனேர் மாரா சனுமடுத்த
தாதனையும் நற்பூஞ் சபாமண் டபமதனில்

மாவினங்கீ தம்பாட மந்திநின்று கூத்தாடக்
காவினத்தில் வாழ்கோ கிலமுழவங் காட்டிநிற்க

ஆவலுடன் மாதும் அரசனுமங் கேயமைந்த
பூவமளி மேவிப் பொருந்திச் சுகித்திருப்ப

மாயமான் பின்னவன்போய் வாய்ந்ததிரு மானைவிட்டான்
போயமான் பின்னிவன்போய் போந்ததிரு மானைநட்டான்

## பிரபுவைத்தேடி தளங்கள் வருதல்.

பொன்மானை யன்றுதொடர் பூமானைப் போலுமொரு
தென்மானைப் பின்றொடரும் சீமானை யேதேடி

மான்பின்னே யோடிவந்த மாராசன் பொற்சுவட்டைத்
தான்பின்னே நாடிவந்த தானை யொலிகேட்டு

வாசநீ ராடியந்த மங்கையையங் கேநிறுத்தி
மாசகன்ற சேனையின்பால் வந்தே மனக்கனிவாய்

## பிரபு தளங்களைக்கண்டு நகர்நோக்கி விஜயமாதல்.

ஓதக் கடலுக் குவாமதிபோ லுங்கமலச்
சீதக் கடலினுக்கோர் செங்கதிர்போ லுஞ்சேர்ந்தான்

பொன்னவிரு மின்னொளிசெய் பொற்பார் சிவிகையின்மேல்
மன்னவனு மேறவுயர் மந்திரிகள் சூழ்ந்துவர

மந்தாரங் கோங்குபுன்னை மாவாரஞ் ஞாழன்மகிழ்
சந்தாபந் தீர்க்குநறுஞ் சாதிப் பலாநிறைந்த

பூவையெலாஞ் சேர்ந்து புகழையெடுத் தோதநறுங்
காவைக் கடந்து கனத்தபரி வாரமுடன்

தன்னார் முகமாய்ச் சதுரங்க சேனையுடன்
பொன்னூரைக் காத்த பொருவேற் குமரனைப்போல்

சங்கீத மௌனந் தவண்டைதுடி யெக்காளம்
இங்கிதமா கச்சேர்ந் தெழுகடலைப் போலொலிக்க

நீடியகை வேத்திரரும் நேர்கஞ் சுகியர்களும்
சாடிமிகச் சூழ்ந்துவருந் தானைகளைத் தான்விலக்க

வீமஜெய போச விஜயமத கெம்பீர
காமாகு ராய கருணா காசில

நாவலவர் போற்றதிபா நம்சொக்க லிங்கமெனும்
பாவலனுக் கேற்ற பசும்பொன் றருகுமுணு

சோமா பராக்கு சுகிர்தா பராக்குதிருக்
காமா பராக்கெனவே கட்டியமுந் தான்கூற

வானிற் பலவெண் மதியுதித்துச் சூழ்வதனை
மானப் பலவெண் மணிக்குடைக டானெருங்க

வானாடு மெச்சவரு வார்க்குவரை யாதளிப்போன்
தேனாடு சஞ்சீவிச் சீர்நகரி லேபுகுந்து

## பிரபு பவனிவருதல்.

நீடும் பலவளங்க ணேர்ந்தோங்கு மாநகரில்
நாடும் பவனிவர நன்மனத்தி லேநினைந்து

வஞ்சகநெஞ் சோர்தம் மனத்திற்கா லூன்றுகின்ற
பஞ்சகதி மிக்க பரிமீது வந்தேறி

வாய்ந்துவரு நல்வினைபோல் மன்னுநல மேயுதவற்
கேய்ந்தமதி மந்திரிமா ரேந்தலின்பின் னேகிவர

ஆனை யொலிவு மதிர்முரசின் பேரொலியும்
சேனை யொலியுமலை செல்லொலியை வாயடைப்ப

மாமேக மென்ன மதயானை முன்னணியாய்த்
தாமேக வாசிநிரை சாருமதன் பின்னேக

நாற்றமிகு மும்மதத்தின் நற்பரிவி லாழியினேர்
சேற்றினையே தாண்டத் தியங்கும் களிறினங்கள்

## பவனிவரும் பிரபுவைக்கண்டு எவரும் ஆசைகொளல்.

தேடவரும் பேறெனவே சேர்ந்தமகா ராசனைப்பார்த்
தாடவரும் பெண்மைதனக் காசையுற்று ரத்தருணம்

மானினமே போன்றும் மயிலினம்போ லுங்குழலிற்
றேனினமே யார்ப்பவந்து சேர்ந்தார் பலமாதர்

மண்ணினீ ரின்றி மழைவரண்ட காலமதில்
உண்ணுநீர் கண்ட வுழைக்குலம்போ லுஞ்சேர்ந்தார்

ஏந்து குழல்சரிய வேறுங் கலைசொரியப்
பூந்துகிலும் வீழவுயர் புத்தி மருண்டுநின்றார்

கண்ணினுற் காதலெனும் காணியைநாம் கண்டதின்று
பெண்ணினு லெய்துமுயர் பேற்றின் பலனிதென்பார்

நாணும் கலையும் நலனு முயிரொழியப்
பூணு மடனறிவு பொற்புமிழந் தாளொருத்தி

போங்தெ னுளத்திற் புகுந்தான் கதவடைத்தேன்
பூந்தா ரமளிசெயப் போவாய்நீ தோழியென்பார்

வானிமிர்ந்த சீர்த்திமிகு வள்ளலழ கைப்பார்க்க
மேனி குளிர்ந்துவந்து வெப்பென் றகம்போவார்

கூந்தற் பொறையாற் குவிந்த தனப்பொறையால்
ஏந்தலையே காணு திடைவெளியி லேபார்ப்பார்

வள்ள லுயர்முகமாம் வண்கமலத் தண்மலரிற்
கள்ளமிகு காரிகையார் கண்ணளிகள் வீழ்ந்தனவே

சீர்த்தி மிகுமிறைவன் செங்கணுற் சிந்தையினுற்
பார்த்திலனே சற்றும் பரிவிலனென் பாளொருத்தி

சேலையொடு மேகலையும் சேர்ந்தொன்று கச்சோர்ந்து
காலைத் தடுப்பக் கவன்றார் சிலமாதர்

இவ்வண்ண மாதரெல்லா மேங்கி யுளமுருகப்
பவ்வமெனும் சேனையொடு பார்த்திபனுஞ் சென்றேகி

கட்டியர்கள் வாழ்த்தக் கவிவாண ரேத்தெடுப்பப்
பொட்டிசைந்த நெற்றிநல்லார் பூரணகும் பந்தாங்க

தாலமதில் மிக்கவெழில் சார்ந்துயர்ந்த மாதரெலாம்
ஆலத்தி தாங்கி யருகே மகிழ்ந்துநிற்ப

வாம்பரியை விட்டு வடிவமதன் கீழிறங்கித்
தாம்பரிவா லுற்றோர்க்குத் தானம் பலபுரிந்து

மாமணியீ தென்ன வளருமுயர் மாளிகையாம்
கோமனையி னுட்புகுந்து கோமானுஞ் சீர்த்தியுடன்

எம்மா நிலமு மிறைஞ்சற் குளமுவந்து
சிம்மா தனத்திற் சிறப்புற் றினிதிருப்ப

## தலைவி தலைவனைக் காணாதயர்தல்.

இன்னவித மன்புற் றினிதா சனத்திருந்த
மன்னன் வரவை வனத்திலுண ராதயர்ந்து

மாலையே யுற்று மயங்கி மதிமருண்டு
சோலைதனி லேதனித்த தோகை நிலையுரைப்பாம்

நேத்திரம்போ லென்னையுற்ற நேசன்வரு வானெனவே
காத்திருந்த மங்கைசென்ற காவலனைக் காணாமல்

சித்தம்நொந்து வாடித் திகைத்துடல மேபசந்து
பித்தமுற்றோர் போலப் பிதற்றி மயலாகி

ஏங்கிப் பெருமூச் செறிந்து மதிமருண்டு
தாங்குவா ரின்றித் தனியே புலம்பலுற்றாள்

வந்தெனது கையை வலியவே தொட்டணைந்த
சந்தமிகு மெந்தனுயர் சாமி வாராதென்னே

எந்தனையே மாற்றி இரும்பொழிலி லேமறைந்தோன்
கந்தனோ விந்திரனோ கந்தர்ப்ப னோவறியேன்

மாலோடு மென்னை மருவினோ னோங்குதிரு
மாலோவென் னென்று மதிப்பே னறிகிலனே

கந்தனென்றால் முந்நான்கு கையிலையே காவுறையும்
மைந்தனென்றா லாயிரங்கண் வாய்ந்திருப்பக் காணேனே

அச்சுதனென் றால்முகிலி னார்ந்த நிறமிலையே
மெச்சுமத னோவவற்கு மேவு முருவிலையே

போந்தெ னுளத்திற் புகுந்து வருத்துகின்ற
காந்தன்வரத் தாழ்ந்ததென்ன காரணமோ தேர்கிலனே

என்னெனவோ மேவற் கிதஞ்சொல்லி வந்தணைந்த
மன்னன்மன மென்னைவிட்டு மாறினதோ வோர்கிலனே

உன்னுமெங்க ளாருயிரை யொன்றாய்ப் படைத்ததெய்வம்
பின்னு முடலைப் பிரித்ததிதற் குத்தானோ

தன்னொப்பா ரில்லாத் தரத்தினார் சென்றவிடத்
தென்னைப்போல் மாற்றா ளெதிர்ப்பட்டா ளோவறியேன்

ஓதற் குறாத வுறுதிசொல்லி யென்மனது
பெதமுறா திங்குவைத்துப் பேர்வனத்திற் சென்றதுரை

வாராத தென்னவிது வஞ்சகமோ சற்றுமனத்
தோராத தென்ன வுயர்வோ வறிகிலனே

நான்செய் தவறெதுவோ நாடியன்று செய்தவமோ
தேன்சொல்லோ னுள்ளத் திடமோ வறிகிலனே

என்று பலபலவா யெண்ணியெண்ணித் தன்னுளத்தி [றாள்
லொன்றுந்தோற் றாமல்வனத் துண்ணுழைந்து பாற்கலுற்

கானெலாந் தேடிவரு கானலைநீ ரென்றோடு
மானெனவே சென்று மயங்கி நிலைகுலைந்து

பார்த்தவிட மெல்லாமப் பார்த்திபனென் றேநிருந்த
ஆர்த்தியுட னோடி யடையா துளமருண்டு

ஆய மடமா தரசனைக்கா ணாதடுக்க
நேயத்தாற் றானே நினைத்துப் புலம்பலுற்றாள்

காவியே வண்டினமே கட்பகையை யெண்ணாதெம்
மாவிதனைக் கண்டா லறைவீர் மறையாமல்

கொன்றையே தண்டலையே கூந்தற் பகையோரா
தின்றைக் குயிர்போலும் எந்தல்வரக் கண்டதுண்டோ

வீங்கு தனத்தின் வெறுப்பி னிகழாமல்
கோங்கு மரமேயென கொற்றவனிங் குற்றதுண்டோ

கஞ்சமே யென்முகத்தாற் கானு மிகல்நினையா
தஞ்சமென வந்தேற் கறிவிப்பீர் நாதனையே

தேகத்தால் நேர்ந்த சினமின்றிச் சண்பகமே
சோகத்தால் வந்தேன் றுணைவனைக்கண் டாலுரைப்பாய்

மாதிரிநே ரில்லாவோர் மன்னன் வரவுணர்ந்தார்
பாதிரியே நாதனையே பார்த்திருந்தாற் சேர்த்துவைப்பாய்

கிஞ்சுகத்தே மேவிக் கிளைக்குமிளம் பைஞ்சிறைகொள்
அஞ்சுகங்கா ளெந்தனுய ரன்பன் வரவுரைப்பீர்

மாவிற் குயிலே மருவு மிளமயிலே
சேவித்தே னுங்களையென் சேந்த னிடஞ்சேற்பீர்

என்றுடுக்கை சோர வெழிலா ருடலயரத்
துன்றுகருங் கூந்தலொடு சொன்ன வளைகழலத்

தன்னை மறந்து தரையிற் கிடந்தயர்ந்து
மன்னையே யெண்ணி மதிமருண்டு மூர்ச்சையுற்றாள்

## பாங்கியர் தலைவியைக் காணல்.

பூவையெல்லாம் பற்றலுற்ற பூவையரெ லாமழகார்
பாவைதனைத் தம்மினத்திற் பார்க்கா தவசமுற்று

மானெலாங் கூடி வருவதுபோ லத்திரண்டு
கானெலாந் தேடியங்கு காணு துளமருண்டு

பஞ்சியா லோங்குதனப் பாரத்தா லன்னநடை
வஞ்சியிரு தாளின் மருவுஞ் சுவடறிந்து

மேவுங் குறியை விடாதுதொடர்ந் தேகவங்கே
கூவுங் குயிலும் குரலடைத்து நின்றேங்க

மென்முலையி லேகுறியும் மேவிதழி லேவடுவும்
மின்னுதலி லேதிலகம் வேர்வரும்பச் சிந்தியதும்

வார்குழலுஞ் சோர வளையல் காம்நெகிழத்
தார்குலைய மேனி தளர வுடையுலைய

தங்கநிற மெல்லாம் தரையிற் புழுதிபட
மங்கைமார் கண்டு மயங்கி மனமுலைந்து

தெய்வக் குறையோநேர் திட்டிபட்ட தோவனத்தில்
மெய்வருத்தத் துண்டான வெப்போ வறிகிலமே

அன்னமே தேனேமுன் னுன கடலமுதே
சொன்னமே யெம்முயிரே தூண்டா மணிவிளக்கே

வாய்திறந்து பார்த்தெமக்கோர் வார்த்தைசொல்ல லாகாதா
தாயறிவா ளாகிலுயிர் தப்பாது மாய்ப்பளென்றே

வாரி யெடுத்து மடியின்மார் போடணைத்து
நாரி முகத்தை நறுநீரி னூற்றுடைத்து

மாங்கனியே யெங்களுக்கு வாய்த்த செழும்பாகே
தீங்கரும்பே யுன்றனுக்குத் தீங்கரும்பக் காரணமென்

என்றுரைத்த பாங்கியருக் கேந்திழையு மாவலுடன்
ஒன்று முரையாடா தூமரைப்போ லுற்றிடவும்

கண்டார்க ளாடவனின் காற்சுவட்டைப் பக்கமதில்
உண்டான பித்திதுவென் றுண்மை தனையறிந்து

தேவனோ தீங்கனியைச் சேர்ந்தகன்று போனமகன்
ஏவனோ வென்ன இசைத்துப் பலவாராய்

மானபரன் நாகப்ப மன்னனுயர் மான்வேட்டை
கானகத்தில் செய்துவரக் கண்டோ மவரேயிக்

காரிகையைச் சேர்ந்து கலந்ததிதற் கையமில்லைப்
பாரில் நமக்குப் பயமும் பழியுமில்லை

புண்ணியவான் நாகப்ப பூபதியைச் சேர்ந்ததிவள்
உண்மையெனில் மங்கையரு ளோங்குமதிஷ் டக்காரி

## பாங்கியர் தலைவியை
## மாளிகைக்கழைத்து வரல்.

என்னுஞ் சகிமார்க ளேந்திழையைக் கைத்தாங்காய்ப்
பொன்மா ளிகைக்கழைத்துப் போய்ப்புகுந்தங் கார்த்தியுடன்

செங்கையினாற் றங்கிமிகச் சேர்ந்தவிரு தாள்வருடி
நங்கைதனை வைத்தார் நறியமலர்ச் சேக்கையின்மேல்

வாக்குப் புரண்டு வனவேடன் செங்கரத்தாற்
றாக்குஞ் சரத்துடனே சாய்ந்த மயிலுமொத்தாள்

ஆய்ந்த மலாமளி அக்கினியி லேறியதாற்
காய்ந்து பொரிந்து கலவையெலாஞ் சிந்தினவே

ஏய்ந்த கனலா லிழைபுகுந்த நூலணைத்தும்
தீய்ந்து கரிந்தனவே செய்ய தளிர்களெல்லாம்

## தலைவி விரகத்தாற் புலம்பல்.

தேடரிய மின்னாளைச் சேர்காமத் தீதனையுஞ்
சாடுமென்றே வெய்யோனும் சார்ந்தான் கரமொடுக்கி

மங்கையா மிம்மயிலை வான்கோம்பி கண்டுசினந்
தங்கஞ் சிவந்ததுபோ லந்திவந்து போயினவே

ஆலந் தொடர்ந்ததுவோ ஆழிகிளர் வோவலது
காலநிற மையிற் கலந்ததெனுங் காரிருள்போய்

நீரில் விழுவொருவன் நீர்நின்று மற்றொருவன்
பாரி லெழுவான்போற் பான்மதியந் தோன்றினவே

திங்களெனுந் தச்சன் திசையனைத்தும் வெண்ணிலவாம்
பொங்கு சுதையாற் புதுக்குவான் போன்றுளதால்

ஓங்கு மதியி னொளிசுடரா லொண்டொடியாள்
தாங்கா தவசமுற்றுத் தானே புலம்பலுற்றாள்

சங்க முலவுந் தனிக்கடலின் நங்கையுடன்
துங்கமுடன் றோன்றிற் சுடுதியோ யென்னையுமே

தக்கன் மகத்திலொரு தாளா லுதையடைந்தாய்
மிக்க கொடுமையன்றோ வெந்தழலை வெண்மையெனல்

நஞ்சமதை யங்கமதில் நண்ணினோன் நீரடுத்துச்
செஞ்சடையிற் சேர்த்ததுநின் றீமை கருதியன்றோ

பாராட் டமுதகுணப் பண்பினோ னென்பதுனைக்
காராட்டை யென்றுங் கவின்வெள்ளா டென்பதொக்கும்

நாடோறுந் தேய்வாய் நலமில்லா நின்றாத்தா
வீடோவொன் றில்லாத வென்னையென்ன செய்யாயோ

இங்கொருவ ரில்லா திருக்குஞ் சமயமதில்
அங்கசனுற் றீவினையே யன்றிலாய் வந்தாயே

கொல்லாத நோன்பின் குறுமுனியைச் சார்ந்துமெனைக்
கொல்லாநின் றுயுனது கொள்கையிதோ மாருதமே

ஆக்குந்தாய் நின்சொல் லறியாமுன் னேதுறந்த
காக்குந்தா யுன்றனுரை கண்டுவெறுத் தேகழித்த

பூக்கு மாத்திற் பொருந்தி வனக்குயிலே
நீக்கமறக் கூவி னினைவெறுத்தற் கென்தடையே

கல்லு முருகவரும் காளைகவின் றேர்ந்தவர்முன்
செல்லுதற்கு நாணம் செனித்தே தனித்திருக்கும்

ஏழையென வந்திங் கெனைவருத்து முன்றன்மனக்
கோழைதனை நன்றாய்க் குறித்தே னுருவிலியென்

றிங்கடுத்த துன்பனைத்து மெண்ணிப் பலவாராய்
அங்கசனம் பாலேமா தங்கசனம் பால்வெறுத்தாள்

ஆயசத்தைக் கண்டயரு மன்பார் திருவினுக்குப்
பாயசத்தை நேர்ந்துநறும் பாயசத்தை யேகழித்தாள்

மண்டுங் கனிரசமும் வாய்ந்த செழும்பாகுங்
கண்டும் கனியும்வரக் கண்டுங் கனிவிழந்தாள்

பாங்கியரு மீன்றிமதன் பாணத்தா லேதளர்வுற்
றேங்கிப் புலம்பி யிருக்குந் தருணமதில்

## அன்னை பாங்கியரை வினவல்.

முன்மகமே செய்து முதிர்ந்ததவக் காலுதித்த
தன்மகவின் பாலுயர்ந்த தாயு மினிதடைந்து

வேர்த்துத் தளர்ந்து மெலிந்த திருமகளைப்
பார்த்துப் பதைபதைத்துப் பாங்கியரைத் தான்சினந்து

தோய்ந்த மதுரமொழித் தோகையற்குக் கானகத்தில்
வாய்ந்த தறியேன் மறைக்கா துரையு மென்றாள்

இவ்வசனங் கேட்ட இருளையரு மேநடுங்கி
அவ்வனத்தி னேர்ந்ததனை யன்னைக் கறைய லுற்றார்

வஞ்சனையு மல்லவுயர் மாற்றார்கள் சூதுமல்ல
செஞ்சொன்மொழி மாதினுக்குத் தெய்வக் குறையுமல்ல

பூங்கா வனத்தில்வனப் போதெடுக்கும் போதிலென்றும்
நீங்காதா ளெம்மைவிட்டு நீங்கி மலரெடுத்தாள்

சோடிழந்த அன்றிலைப்போற் றேகையைக்கா ணாதுமனம்
வாடி மயங்கி வருந்தியொரு பாங்கதனில்

ஆரணியந் தன்னி லசோக மாத்தடியில்
வாரணிந்த கொங்கை வடுவேற மெய்சோரத்

தங்கநிற மங்கர் தரையிற் றுயிலமர்ந்த
மங்கையைப்பார்த் தோமடுத்தோர் மன்னன் சுவடறிந்தோம்

தேட்டுத் தழைக்குவளச் செம்மனு கப்பவள்ளல்
வேட்டைக்கு வந்த விதமன்றி வேறறியோம்

என்றவுரை கேட்டவுட னீன்றதா யையமுற்று
நன்றிதுவோ செய்துவந்தீர் ஞாயம்வெளி யானதிங்கே

கானகத்திற் சென்றுசெய்த காரியங்கள் நன்றுச்சே
ஆனதினல் நேரும் அவமதிப்பை யோர்ந்திலிர்நீர்

பாங்கியரே பொற்பூப் பறிக்கவனஞ் சென்றேகி
மாங்கிலியஞ் சூட்டி மயற்படுத்தி வந்தீரோ

தேன்மொழியா ளுள்ளத் திடத்தையறிந் தால்முனமே
தேன்பொழிற்குப் பூவெடுக்கச் செல்ல விடுவேனே

## அன்னை மகளை வினவி அகமகிழல்.

கச்சணிந்த மின்னரசே காரிகையே யுன்றன்மன
திச்சையுறச் செய்தங் கிசைத்த தெவருரைப்பாய்

நித்தமுமே யப்பொழிற்கு நேரிழையே போகேலென்
றெத்தனையோ சொன்னே னிதமென்று கேட்டிலையே

பொன்னனையா ளவ்வனத்திற் போதெடுக்கப் போயுறினும்
தன்னந் தனியாய்த் தனித்திருக்கக் காரணமென்

பூவெடுக்கப் போயிருந்தாற் போனதுபோ லேவருவாள்
காவடுத்துக் காவலன்பாற் கைகலக்கப் போனவள்காண்

வார்ந்த கிழவிசொற்கு மாதரசி யஞ்சுவளோ
ஆர்ந்த புவியா ரனைவருக்கும் நாமம்வைப்பாள்

மண்வசியஞ் செய்யுமிந்த மாவணிக மன்னவற்குப்
பெண்வசியஞ் செய்தல் பெரிதன் றெனநினைந்து

மன்னியதோர் கன்னி வலையின்றி யேகிடைத்தாற்
கன்னிக் குயிலைக் கலக்காமற் போவாரோ

ஆறடுத்தாற் கான வரும்பசியி லார்ந்தசுவைச்
சோறடுத்தா லுண்டு சுகிக்காமற் போவாரோ

அஞ்சுகத்தைக் காட்டு மரியமொழி யையுடைய
இஞ்சுகத்தைக் கையிற் கிடைத்தால் விடுவாரோ

கான்வேட்டைக் காகவந்த காவலனுக் கானகன்னி
மான்வேட்டை கிட்டின் மருவா தகல்வாரோ

தொய்யிற் குயத்தழகும் தோகை முகத்தழகும்
மெய்யழகுங் காணிலந்த வீரன்விட்டுப் போவாரோ

வட்டவுல கம்புரக்கும் மன்னவனு கப்பவள்ளல்
கட்டழகைப் பார்க்கிலந்தக் கன்னிவிட்டு மீள்வாளோ

பார்த்திபனைப் பார்த்தவிந்தப் பாவையுயி ரோடுவந்த
தார்த்தியுற நாம்செய் யருந்தவத்தின் பேறெனவே

குற்ற மொருவர்செய்யிற் கொற்றவன்பாற் போயுரைப்பார்
கொற்றவனே செய்யிற் குறையுரைக்க நீதியுண்டோ

பெற்றோர்க ளின்றிப் பிரபும் நினைந்ததென்ன
பொற்றொடியு மவ்வாறு போவதற்கு ஞாயமென்ன

பேதமுறும் பேதமையே பெண்ணிற் கணிகலமென்
றோது மொழிப்படியே யொண்டொடியாள் செய்துவந்தாள்

மாதரெலாம் பாங்கிருக்க மன்னன்நா கப்பன்செய்
மாதவத்தால் யானீன்ற மாதரசைச் சேர்ந்ததற்கு

கஞ்சமலர் வேதன் கணித்ததனை யெண்ணுது
வஞ்சியரை நோவ வகையெமக்குத் தானுமுண்டோ

நாயகன்மே லிச்சைகொண்டா னன்னின்றூர் வேண்டாவோ
ஆய நமதுபுக ழுத்தனையு மோர்ந்திலிரோ

ஆங்கால மெய்வருந்த வேண்டா மருங்கொம்பிற்
றேங்காய்க் கிளநீர்போற் சேருமென்ற மெய்யுரைநேர்

இவ்வுலகில் வாழ்புருட ரெல்லவர்க்கும் நற்கிளைக்கு
மொவ்வுந் திருமணமே யொண்டொடியாள் செய்துவந்தாள்

மங்கைதனக் கேற்ற மகராச னேயவனவ்
வங்கசனுக் கேற்ற வருமைரதி யேயிவளும்

முற்பிறப்பிற் செய்த முழுக்தவத்தி னற்பலனே
பொற்புமிகு காண்மருவிப் பொற்றருவைக் கொண்டுவந்தாள்

பாவுறுநற் சர்க்கரைமென் பந்தரின்மேற் றேன்மாரி
மேவியதே யன்றி விளைந்ததினி யொன்றுமிலை

இவ்வா றுரைசெய் திலகுமுய ரன்னையுந்தன்
நவ்விவிழி யாட்கு நகைவகையெ லாமணிந்து

மின்னைப் பழித்தவிடை வித்தகியே நாகப்ப
மன்னையே சேர்ந்து மகாராசி யாகவுற்றே

விள்ளும் புவியனைத்தும் வெண்குடைக்கீ ழாண்டினிது
பிள்ளை பதினாறும் பெற்றுநீ வாழ்ந்திடென்றாள்

இத்தகைய வார்த்தைதனை யீன்றதாய் செப்புமுனம்
மொய்த்த குழலியர்கண் முத்துச் சிவிகையுடன்

செப்புங் கவரியொடுஞ் சேர்ந்தபல கீதமொடும்
மைப்படிந்த கண்ணிமனை வாசல்வரக் கண்டுவந்தாள்

பொற்சிவிகை கண்டுடலம் பூரித்துத் தன்மகளை
யற்புடனங் கேற்றி யாசன்பா லேயனுப்ப

பெற்றதாய் சொற்படியே பெண்கொடிசஞ் சீவிநகர்க்
கொற்றவனைச் சேர்ந்து குணமாக வாழ்ந்திருந்து

கற்பார்ந்து புத்திரரைக் காதலுடன் பெற்றெடுத்துப்
பொற்பா ரமிர்குண பூஷணியும் வாழ்ந்திருந்தாள்

---

## வாழி.

மாமறையும் வாழி மருவும் மகம்வாழி
பூமலியும் வானம் புவியு மிகவாழி

சந்ததமும் நல்லறமும் சார்தவமு மேவாழி
பைந்தமிழிற் றேர்ந்துயர்ந்த பாவாண ரும்வாழி

செப்பும் செழும்புவியிற் றேசபக்த ரெல்லோரும்
ஒப்பரிய விந்நூலும் ஓங்கி மிகவாழி

தீர னுதாரன் திருமா நிலங்குபுயன்
சீரமர்ந்த பூவிற் சிறக்கு மதிகாரன்

திக்கனைத்தும் சீர்த்திநிறை சீமான்நா கப்பவள்ளல்
தக்கமனை மக்கள்செல்வந் தான்றழைத்து வாழியவே.

சுபமஸ்து.